2002 அக்டோபர் 24]

1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

29. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 2002-2003 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மற்றும் 2001-2002 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு. [1948 ஆம் ஆண்டு மின்சார (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் "மக்கள் சாசனம்" (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்கள் (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2002).

3. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2002).

4. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் உரிமையியல் வழக்குகள் மதிப்பீடு (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2002).

5. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2002)

6. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2002)

7. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் உரிமையியல் வழக்குகள் மதிப்பீடு (திருத்த) செயல்முறை நிறுத்தி வைத்தல் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2002).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8. திருச்சி, நடுப்பட்டில் உள்ள மணிகண்டம் ஊராட்சி கல்வி மற்றும் கிராம வளர்ச்சி சங்கம் தயாரித்து விற்பனை செய்யும் கையுறைகள், துணித்தொப்பிகள், ஊறுகாய்கள், நார்பொருட்கள், கோரை, கண்ணாடி பொருட்கள், ஏ.டி.வி. வண்டிகள், பழரசம் ஆகிய பொருட்களுக்கு, 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) படி, வரி எதுவும் செலுத்த வேண்டியதில்லை என ஆணையிடுவது குறித்து வணிகவரிகள் துறையின் 6-3-2002 ஆம் நாளிட்ட 19 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

9. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2002).

10. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்ற தடை அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2002).,

11. இறக்குமதி செய்யப்பட்ட சில மூலப் பொருள்களிலிருந்து அல்லது பாகங்களிலிருந்து வணிகர் ஒருவர் மாநிலத்திற்குள் தயாரித்த யாதொரு பொருளின் பன்மாநில விற்பனை குறித்து அவர் செலுத்தத்தக்க வரியை, அப்பொருளின் நுழைவின் பேரில் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருள்களின் நுழைவு மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) கீழ் செலுத்திய நுழைவு வரிக்குச் சமமான அளவுக்குத் திருப்பிச் செலுத்துவது இல்லாமல் குறைப்பது பொது நலனுக்கு அவசியம் என்று தெளிவடைந்ததன் பேரில், அவ்வாறு வரியைக் குறைக்க வேண்டுமென்று இதனால் கட்டளையிடுகிறார். ஆனால் அத்தகைய குறைப்பானது, தயாரிக்கப்பட்ட பொருள்களின் பன்மாநில விற்பனை குறித்து செலுத்தத்தக்க வரியில் 50 சதவீதத்திற்கு மேற்படக்கூடாது. மேலும், அவ்வாறு தயாரிக்கப்பட்ட பொருள்களின் ஏற்றுமதியைப் பொறுத்தமட்டில் இக்குறைப்பு மேற்சொன்ன 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ் செலுத்தத்தக்க வரியில் 100 சதவீதம் வரை (செலுத்துவது இல்லாமல்) இருக்க வேண்டும் என்பது குறித்தும் மற்றும் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருள்களின் நுழைவு மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு பொருள் மேற்சொன்ன 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருள்களின் நுழைவு மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) கீழ் எந்த வடிவில் இறக்குமதி செய்யப்பட்டதோ அதே வடிவில் மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்ய வரும்பொழுது செலுத்தத்தக்க வரியை செலுத்தப்பட்ட நுழைவு வரி தொகைக்குச் சமமான அளவுக்குக்

குறைப்பது, பொது நலனுக்கு அவசியம் என்று தெளிவடைவதால், அவ்வாறு வரியைக் குறைக்க வேண்டுமென்று கட்டளையிடுவது குறித்தும் வணிகவரிகள் துறையின் 1-7-2002 ஆம் நாளிட்ட 83 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்.

12. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்த) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/2002).

13. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருவள்ளுவர் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 11/2002).

14. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 12/2002).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS